9

# உம்ரி

# தேவனின்றி வெற்றி

*வேதபாடப் பகுதி: 1 இராஜாக்கள் 16:23-28*

தேர்ந்துகொள்வதற்கான உரிமை என்பது பாதுகாக்கப்பட வேண்டிய சிலாக்கியமாகவும் பயம் நிறைந்த பொறுப்பாகவும் உள்ளது. நமது பண்புகளையும் நமது அடைவிடங்களையும் தேர்ந்துகொள்ளும் வாய்ப்பைத் தேவன் நமக்கு அருளியிருக்கிறார் என்ற சிந்தனை எவ்வளவு ஆழமானதாக உள்ளது! தொடக்கம் முதல் முடிவு வரை, தேவனைப் பற்றிய மறைமுகமான கருத்துக்களில், இதைப்போன்று பாரமாகச் சுமத்தப் பட்டுள்ள இன்னொரு கருத்தைக் காணுதல் என்பது கடினமாயிருக்கும். தேவன் நம்மைச் சிருஷ்டித்தபோது, நாம் விரும்பினால் அவரை நமது வாழ்வில் இருந்து என்றென்றைக்குமாக மூடிப்போகும் வல்லமையை அவர் நமது இருதயங்களில் வைத்தார். இந்த அண்டத்தைப் படைத்து ஆளுகின்ற ராஜரீகமான தேவனுக்கு “இல்லை” எனக்கூறும் உரிமையை அவரே நமக்குக் கொடுத்தார்!

**சுயாதீனமான தேர்ந்துகொள்ளுதலும் தேவனும்**

சுயாதீனத்தின் கொடை என்பது, மனிதனின் சிந்தித்தல், முடிவுகள் மற்றும் சுயவிருப்பங்கள் ஆகியவற்றிற்குத் தேவன் தம்மையே தாக்கப்படக் கூடியவராக ஆக்குதலைத் தேர்ந்துகொண்டுள்ளார் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. அவர் மண் பொம்மைகளையல்ல ஆனால் பிள்ளைகளையே விரும்புகின்றார். நாம் நமது விருப்பங்களுக்கு மாறாக வற்புறுத்தப் படுவதினால் அல்ல, ஆனால் நாம் அவரைப் பற்றி மேற்கொண்டுள்ள அன்பான தேர்ந்துகொள்ளுதலினால், அவர் யாராயிருக்கிறார் என்பதை உணர்வுடன் ஒப்புக்கொள்வதினால் அவரை ஆராதிக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். நாம் தேவனைச் சேவித்தல் சரியானதும் நல்லதுமாய் இருக்கிறது என்று நாம் முடிவு செய்வதால் அவரைச் சேவிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கும்படிக்கு, தேவன் தாம் புறக்கணிக்கப்பட்டிருத்தலின் இடர்ப்பாட்டிற்குத் தம்மை வெளிப்படுத்தத் தேர்ந்துகொண்டார். தேர்ந்துகொள்ளுதல் என்பதைக்கொண்டு மனிதனுக்கு வல்லமை அளிக்கும் படியான தேவனுடைய இந்த மனவிருப்பம், அவரது தெய்வீக அருட் பொழிவு என்று அழைக்கப்படலாம்.

தேவன் நமக்கு ஆராயக்கூடிய, பகுத்தறியக்கூடிய, மற்றும் மேன்மை யான, நீதியான, நல்லவற்றைத் தேர்ந்துகொள்ளக்கூடிய மனங்களைக் கொடுத்தார். சரியானது எது என்பதை நாம் தேர்ந்துகொள்ளக்கூடியது

சாத்தியமாகும்படிக்கு, அவர் தவறானது எது என்பதைத் தேர்ந்து கொள்வதை நமக்குச் சாத்தியமாக்கினார். மனிதர்கள் நல்லவற்றின் இருப்பை விரும்பும் திறன் உடையவர்களாய் இருப்பதற்காகத் தேவன் தீமையின் இருப்பை அனுமதித்தார்.

### சுயாதீனமான தேர்ந்துகொள்ளுதலும் மனிதனும்

சுயாதீனமான தேர்ந்துகொள்ளுதலானது மனிதன் என்னவாக இருக்கின்றான், மனிதனின் இயல்பு மற்றும் சாராம்சம் என்ன என்பவற்றையும் சுட்டிக்காண்பிக்கிறது. அவன் ஒரு எந்திரபொம்மையாக அல்லது உணர்வற்ற விலங்காக இருப்பதில்லை, ஆனால் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட சிந்திக்கும் ஆத்துமாவாக இருக்கின்றான். அவன் சிந்திக்க, அன்புகூர, மற்றும் மதிக்க முடிகின்ற உயிரினமாயிருக்கின்றான்; அவன் வெறுக்க, இழித்துரைக்க, மற்றும் புறக்கணிக்க முடிகின்ற உயிரினமாகவும் இருக்கின்றான்.

மனிதனின் சுயாதீனம் என்பது விலைக்கிரயம் எதுவுமின்றி வருவதில்லை, ஏனெனில் அவன் தனது சிந்தனைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றிற்குத் தன்னைப் படைத்தவரிடம் [கணக்கு ஒப்புவிக்க] நிறைவான பொறுப்புடையவனாக இருக்கின்றான். நமக்கு இந்தச் சுயாதீனத்தைத் தருவதில் தேவன் இடர்ப்பாடு ஒன்றை மேற்கொண்டார், ஆனால் இதைப் பெற்றிருப்பதில் நாம் இடர்ப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளோம். நாம் தேவனையும் சத்தியத்தையும் புறக்கணிப்பதைத் தேர்ந்துகொண்டால், நாம் ஏற்படுத்திய தவறான தெரிந்துகொள்ளுதலுக்காகத் தேவனிடத்தில் நாம் பதில்கூற வேண்டியிருக்கும். சிலாக்கியம் என்பது பொறுப்பை வேண்டிக்கேட்கிறது.

### சுயாதீனமான தேர்ந்துகொள்ளுதலும் வாழ்க்கையும்

தெரிந்துகொள்வதற்கான சுயாதீனத்தைத் தேவன் நமக்குக் கொடுத்திருந்தாலும்கூட, அவர் மனிதகுலத்தை நிலைநிறுத்துகின்றார். ஆம், அவரது நிலைநிறுத்துதலுக்கு அளவீடுகள் உள்ளன, ஆனால் அவற்றிற்குள்ளாக - சற்று காலத்திற்கு - மனிதன் தான் விரும்புகின்றபடியெல்லாம் செய்யலாம். நாம் தேவனின்றி, மற்றும் அவருடைய சித்தத்திற்கு விரோதமாக வாழ முடிவுசெய்தால், நம்மால் மாம்சத்தின் சக்திக்குள் முழுமையாக வாழ முடியும். நாம் தேவன் நமக்குக் கொடுக்கின்ற வாழ்வின் வட்டத்திற்குள் வாழ்கின்றோம். சுவாசிக்கின்றோம், மற்றும் இருக்கின்றோம். நாம் வாழ்கின்ற ஒவ்வொரு கணத்திலும், நாம் அவரது நல்ல சுபாவத்தில் பங்கேற்றாலும், தேவன் நம்மை அவருடன் நடக்கச் செய்யமாட்டார். பூமியில் நமது காலம் முழுவதிலும், அவரின்றி வாழ்வதை, அவர் அளிக்கிற கூடுதல் உதவிகளைப் புறக்கணிப்பதை, மற்றும் அவரிடத்தில் இருந்து நாம் பெற்றுள்ள மனிதரீதியான பலத்தில் மாத்திரம் வாழ்வதை நாம் தேர்ந்துகொள்ள முடியும்.

தேவன் நமது வாழ்வில் செயல்படுபவராக, நம் சார்பாக அவர் பலமுள்ளவராய் இருப்பதைக் காண்பிக்க ஆவல் உள்ளவராக இருக்கின்றார்

*(2 நாளாகமம் 16:9). அவர் நீதியுள்ள மனிதரைப் பெலப்படுத்தி நிலைநிறுத்த அம்மனிதருடன் நடக்கின்றார், ஆனால் துன்மார்க்கமான மனிதரிடத்தில் இருந்து தமது ஐக்கியத்தை விலக்கிக் கொள்கிறார் (நீதிமொழிகள் 28:9). அவர் அப்படிப்பட்ட மனிதரை மனிதபலத்தை மாத்திரம் சார்ந்திருக்கும்படி - அல்லது, நாம் சில வேளைகளில் கூறுகின்றபடி, "மாம்சத்தின் புயத்தை" சார்ந்திருக்கும்படி திருப்புகிறார். ஒவ்வொரு நபரின் இருதயத்திலும், தேவன் மாத்திரமே நிரப்பக்கூடிய வெறுமை ஒன்றுள்ளது, அது "தேவ உருவாக்கம் பெற்ற துளையாக" உள்ளது; ஆனால் ஒரு நபர், தனக்குள் உள்ள அந்த வெற்றிடத்தை நிரப்பத் தேவனை ஒருபோதும் அனுமதிக்காது வாழ்வதைத் தேர்ந்துகொள்ளலாம். தேவன் கீழ்ப்படிதல் உள்ள மனிதரை ஊக்குவிக்க, பெலம் அளிக்க, மற்றும் வாழ்விக்க அவருக்கு விசேஷ ஆசீர்வாதங்களைத் தருகிறார்; ஆனால் ஒரு மனிதர், கிருபையும் அங்கீகாரமும் உடைய தேவனுடைய கரத்திலிருந்து இந்த விசேஷ ஆசீர்வாதங்களை ஒருக்காலும் பெறாமல் வாழ்வதைத் தேர்ந்துகொள்ளலாம்.*

*தேவனின்றி ஒரு நபர் உண்மையில் எவ்வகையிலான வாழ்வை வாழக்கூடும்? அவர் எவ்வகையான சாதனைகளை சாதிக்கக்கூடும்? தேவன் நமக்குக் கொடுத்துள்ள சுயாதீனத்தினிமித்தம், அவரது சித்தம் மற்றும் ஆவிக்குரிய குடும்பத்திற்கு வெளியிலும்கூட மனிதன் ஓரளவுக்கு மேன்மையடைய அவர் அனுமதித்துள்ளார். அவரின்றி ஓரளவுக்கு வெற்றிநிறைந்த வகையில் வாழ்வதற்கான இந்த அனுமதியானது, தேவன் நமக்கு அளித்துள்ள சுயாதீனமான ஒழுக்கமுகமையைப் போன்றே தேவனுடைய கிருபை மற்றும் நற்தன்மையைக் காண்பிக்கிறது.*

*தேவனின்றி சாதித்தலின் வாழ்வு, கி.மு. 885 முதல் 874 வரை., பிரிவுபட்ட ஆளுமையில் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளும் முழுமையான அரசர் என்ற வகையில் ஆறு அல்லது ஏழு ஆண்டுகளும் ஆட்சி செய்த இஸ்ரவேல் நாட்டின் ஏழாம் அரசரான உம்ரியால் விவரிக்கப்பட்டுள்ளது.[1] இவர், மூன்று தலைமுறைகள் மற்றும் நான்கு அரசர்களைக் கொண்டு முடிவடைந்த மூன்றாவது அரசவம்சத்தைத் தோற்றுவித்தவராயிருந்தார். இவர் நிச்சயமாகவே, வடக்கு ராஜ்யத்தில் அதுவரை இருந்த அரசர்களிலேயே மிகவும் வல்லமை வாய்ந்த மற்றும் மூர்க்கமானவராக இருந்தார்.*

> *யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தோராம் வருஷத்தில், உம்ரி இஸ்ரவேல்மேல் ராஜாவாகி, பன்னிரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்; அவன் திர்சாவிலே ஆறுவருஷம் அரசாண்டு (16:23).*

*உம்ரி தமது வாழ்வைத் தேவனின்றி வாழ்ந்தார் என்பதுதான் அவரைப் பற்றி விசேஷமாகக் கவனிக்கக்கூடிய மற்றும் சிந்தனையைத் தூண்டக் கூடிய விஷயமாயிருக்கிறது. அவர் திகைப்புக்குரிய வெற்றியைக் கொண்டிருந்தார், ஆனால் அவர் அதை தெய்வீக பலத்தினால் அல்ல, ஆனால் மாம்சத்தின் புயத்தினால் சாதித்தார். அவர் நமக்கு, தேவனுல் மனிதன்மீது பொழிந்துள்ள தேர்ந்துகொள்ளுதலின் சுயாதீனத்தினால்,*

தேவனின்றி ஒருவர் சென்றடையக்கூடிய சாதனைகளின் உயரத்தை நினைவூட்டு கின்றார்.

உம்ரியை ஒரு விவரிப்பாகப் பயன்படுத்தி, மனிதனுக்குத் தேர்ந்து கொள்ளுதலின் உரிமையைத் தேவன் ஒப்படைத்துள்ள விஷயமானது, தேவனின்றி மனிதனை என்ன செய்ய அனுமதிக்கிறது என்பதைக் கண்ணோக்குங்கள்.

## வல்லமைநிறைந்த பலம்

முதலாவது, உம்ரி என்பவர், மாம்சத்தில், மனித சக்தியில், மாபெரும் பலத்தைப் பெற்றிருந்தார். அவர் புகழ்பெற்ற ஒரு போர்வீரன் ஆனார், யுத்த களத்தில் அவர் கொண்டிருந்த திறமைக்காக, அவர் இஸ்ரவேல் நாட்டிற்கு அப்பாலும்கூட மதிக்கப்பட்டிருந்தார். அவர் கொண்டிருந்த மற்றும் மேம்படுத்திக்கொண்ட திறமையானது பரிசுத்த ஆவியானவர் பயன் படுத்திய மூன்று வார்த்தைகளில் கோடிட்டுக் காட்டப்படுகிறது: "அவன் காண்பித்த வல்லமை." 16:27ல் அவரது வாழ்வு பற்றிய தொகுப்புரையில் இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> உம்ரி செய்த அவனுடைய மற்ற வர்த்தமானங்களும், அவன் காண்பித்த வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது?

உம்ரி வாழ்க்கை பற்றிய தமது புறதெய்வ வணக்க அணுகுமுறை யிலும்கூட, அவர் அனேகமாக நாட்டை அழிவில் இருந்து காப்பாற்றும் வழிமுறையாகவே இருந்தார். திப்னியின் மரணத்திற்குப் பின், உம்ரியின் மும்முரமான நடத்துவத்துவமானது நம்பிக்கையற்ற நிலையில் இருந்த நாட்டிற்கு நிலைப்புத் தன்மையைக் கொண்டுவந்தது. பிரிவினையால் பலவீனப்படுத்தப்பட்டிருந்த இஸ்ரவேல் நாடு, வெகு அருகில் ஆதிக்க சக்தி களாக உதித்துக்கொண்டிருந்த அரமேய மற்றும் அசீரிய ராஜ்யங்களினால் தாக்கப்படக்கூடிய அபாயத்தில் இருந்தது. இஸ்ரவேல் நாட்டில் பலம்-வாய்ந்த இயக்கம் ஒன்று உடனடியாக முன்வராதிருந்தால், நாடு நிச்சய மாக தோல்வியடையக் கூடியதாய் இருந்தது. உம்ரி அத்தியாவசியமான வழிநடத்துதல்களை கொடுத்தார்.

ஒரு நூற்றாண்டுக்கு - உம்ரியின் ராஜ வம்சம் தூக்கியெறியப்பட்டு நீண்ட நாட்களுக்குப் - பின்பும்கூட, அசீரிய அரசர்களான ஆதாத்-நிராரி, திகிலேத்-பிலேசர், மற்றும் சார்கோன் ஆகியோர், பலஸ்தீனத்தை "உம்ரியின் வீடு" என்று குறிப்பிடும் அளவிற்கு உம்ரியின் நடத்துவத்துவம் வல்லமை நிறைந்ததாக இருந்தது. சந்தேகமின்றி அவர் இஸ்ரவேல் நாட்டை அதுவரை ஆண்ட அரசர்களிலேயே மிகவும் வல்லமை நிறைந்தவராயிருந்தார்.

இருப்பினும், உம்ரியின் பலம் கர்த்தருடைய பலமாயிராமல் மாம் சத்தின் பலமாய் இருந்தது என்பதை நினைவில் வையுங்கள். சிலர் சொல் வதுபோன்று, மனிதரால் நிகழ்த்தப்படும் எந்த சாதனையும், கர்த்தரின் பலத்தில் இருந்தே வருகிறது என்று கூறுவது தவறானதாகும். அதைத்

தேவன் அனுமதிக்கிறார், ஆனால் அதை அவரே அளிக்க வேண்டும் என்று அவசியமில்லை. உம்ரி பலம் வாய்ந்தவராயிருந்தார், ஆனால் அவர் கர்த்தருக்குள் பலம் வாய்ந்தவராய் இருக்கவில்லை. தாவீது கர்த்தருக்குள் பலம் வாய்ந்தவராய் இருந்தார்; உம்ரி மாம்சத்தில் பலம் வாய்ந்தவராய் இருந்தார். இந்த வேறுபாட்டைக் கவனித்தல் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்றைய நாட்களில், நம்மைச் சுற்றிக் கண்ணோக்கும்போது, மனித முன்கண்ணோக்கு, சக்தி, மற்றும் முடிவற்ற உழைப்பு ஆகியவற்றினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள, உலக அளவில் ஆதிக்கம் செலுத்தும் பேரரசுகள், வெற்றி நிறைந்த நிறுவனங்கள், மற்றும் வல்லமை வாய்ந்த இயக்கங்கள் ஆகியவற்றை நாம் காண முடிகிறது. அவைகள் தேவனிடத்தில் இருந்து வந்தவையல்ல; அவைகள் மனிதனின் பலத்திலிருந்து வந்துள்ளன. யாரேனும் ஒருவர், யுத்தத்தில் வெற்றியடையும்படி ஒரு படையை வழிநடத்துதல், வெற்றிக்கு ஒரு குழுவை வழிநடத்துதல், அல்லது ஒரு புகழ் பெற்ற கட்டிடத்தைக் கட்டியெழுப்புமாறு ஒரு குழுவை வழிநடத்துதல் என்ற உண்மையானது, தேவன் அவர்களுடன் இருக்கின்றார் என்பதற்கு நிரூபணமாகாது. இந்த விஷயங்களையெல்லாம் தேவனை இதன் அங்க மாக்காமலேயே செய்யப்பட முடியும். தேவன், மக்களுக்கு மூளைகளை, சக்தியை, மற்றும் நாம் தேர்ந்துகொண்டால், அவரின்றியே இவற்றைச் சாதிக்கக்கூடிய சுயாதீனத்தைக் கொடுத்துள்ளார்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, தலைசிறந்த விளையாட்டு வீரர் ஒருவர் உலகளாவிய சாதனையைச் செய்திருந்தார். அவரது பெயர் ஒவ்வொரு வீட்டிலும் உச்சரிக்கப்படக் கூடியதாயிற்று. அவர் விளையாடுகின்றபோது, அவர் எப்போதுமே வெற்றிபெற்றார். அவர் "எப்போதும் மிகச்சிறந்தவர்" என்று பெயரிடப்பட்டார். அவரது போட்டியாளர்கள் அவரைக் கண்டு அஞ்சினர். அவர்மீது தேவனுடைய கரம் இருப்பது போலவும், அவர் தோல்வியடையவே மாட்டார் என்பது போலவும் தோன்றிற்று. ஆண்டுகள் கடந்தபோது, அவர் தமது "மகிமையான நாட்களில்" வாழ்ந்திருந்த வகையானது பொதுமக்களின் அறிவுக்கு எட்டியது. அவர் தமது பாவம், சுயநலம், மற்றும் பிறரிடத்தில் மனிதத் தன்மையற்று நடத்தல் ஆகியவற்றில் கெட்டவராய் இருந்தார். அவர் இயல்பான திறமை, தயாரிப்பு, மற்றும் மனித ஞானம் - அதாவது, மாம்சத்தின் புயம் - ஆகியவற்றின்மூலம் வெற்றியை அனுபவித்திருந்தார். அவர் தேவனுடன் ஐக்கியமும் விசேஷித்த வழிநடத்துதலும் இன்றியே இவற்றை செய்திருந்தார்.

உம்ரியின் விஷயத்திலும் இவ்வாறே இருந்தது. அவர் - தமது ஆவி அல்லது இருதயமானது தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்த போதும் - மாம் சத்தின் பெலத்தினால் சாதித்திருந்தார். அவரைக் கண்ணோக்கி மக்கள், "இதோ தேவனால் உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன்!" என்று கூறியிருக்கலாம், ஆனால் உண்மையில், அவர் தேவனுடைய தோழமைக்கு வெளியே இருந்தார். அவர் இயல்பான தாலந்து மற்றும் திறமையைப் பெற்றவராய் இருந்தார், ஆனால் அவர் துன்மார்க்கமானவராக தேவனு டைய சித்தத்தைத் தொடர்ந்து மீறினவராக இருந்தார் என்று அறிவிக்க

வேதவசனங்களின் சாட்சியத்தை நாம் கொண்டிருக்கின்றோம்.

## நடைமுறைக் கண்ணோக்கு

உம்ரி தமது நடைமுறை ஞானத்தையும் கண்ணோக்கையும் பயன்படுத்தியதென்பது, அவர் மாம்சத்தின் சக்தியில் மேன்மையடைந்த இன்னொரு வழியாக இருந்தது. நாட்டை வழிநடத்துதல் பற்றி அவர் ஆழ்ந்து சிந்திக்கையில், சுலபமாகப் பாதுகாக்கப்படுவதாய் உள்ள மற்றும் நாட்டிற்கு மிகவும் தகுதியானதாய் உள்ள ஒரு புதிய தலைநகரம் தேவையாய் இருந்தது என்று அவர் முடிவுசெய்தார். சமாரியா அந்தப் புதிய இடமாய் இருக்க வேண்டியதாயிற்று. யெரொபெயாமின் நாளில் இருந்து உம்ரியின் நாள் வரையிலும், சீகேம், பெனுவேல், மற்றும் திர்சா ஆகியவை தலைநகரங்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன, ஆனால் அவைகள் போதுமானவையல்ல என்று உம்ரி கண்டறிந்தார். அவர் சாத்தியக்கூறுகளை எடைபார்த்தபின்பு, சேமார் என்பவருக்கு உரிமையாயிருந்த ஒரு குன்றைத் தேர்வுசெய்தார். அந்தக் குன்றை அவர், "பாதுகாக்கப்பட்ட குன்று" என்று அர்த்தப்படக்கூடிய வகையில் "சமாரியா," என்று அழைத்தார்.

> பின்பு சேமேரின் கையிலிருந்து சமாரியா மலையை இரண்டு தாலந்து வெள்ளிக்கு வாங்கி, அந்த மலையின்மேல் ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு மலையினுடைய எஜமானாயிருந்த சேமேருடைய பேரின்படியே சமாரியா என்னும் பேரைத் தரித்தான் (16:24).

சமாரியா மலை சீகேமுக்கு வடமேற்கில் ஏழுமைல்கள் தூரத்தில் அமைந்திருந்தது. அது முந்நூறு அடிகள் உயரமாக நின்றது, அது தாக்குபவர்களை எந்தப் பக்கத்திலும் இருந்து எதிர்த்து நிற்கிறவகையில் மற்ற குன்றுகளால் சூழப்பட்டிருந்தது. மேலும், அது வடக்கு-தெற்கு வர்த்தகச் சாலைகளைக் கட்டுப்படுத்தும் வகையில், வியூகத்துவமாய் அமைந்திருந்தது.

தலைநகருக்குக்கென்று இந்த இடத்தை உம்ரி தேர்ந்தெடுத்தது பற்றி அவரது கண்ணோக்கு மற்றும் ஞானம் ஆகியவற்றை வரலாறு உறுதிப்படுத்தியுள்ளது. சமாரியாவானது, கி.மு. 722ல் வடக்கு ராஜ்யத்தின் முடிவு வரையிலும் நாட்டின் விலைமதிப்பான தலைநகராகத் தொடர்ந்திருந்தது.

பரிசுத்தவான்கள் ஞானத்தின்மீதான ஒன்றைக் கொண்டிருப்பதில்லை. புறதெய்வ வழிபாட்டாளர், சமூகத்தின் மற்றும் நாட்டின் நன்மையைப் பாதிக்கின்ற விஷயங்கள் பற்றி அடிக்கடி தமது அறிவைப் பயன்படுத்தி நயப்பாங்கான முடிவுகளை மேற்கொள்கின்றார். இருப்பினும், அவரது திடமான முடிவெடுக்கும் தன்மையானது, தன்னிலேயே மற்றும் தனக்குள்ளேயே, தேவன் அவருடன் இருக்கிறார் என்று அர்த்தப்படுவதில்லை. அது, ஒரு நல்ல முடிவை மேற்கொள்ள அவருக்குத் தேவன் நல்லறிவைக் கொடுத்தார் என்று மாத்திரமே அர்த்தப்படலாம். நல்ல முடிவுகள் மேற்கொள்ளப்படும்போது, வழக்கமாக நல்ல விளைவுகள் வருகின்றன.

புறதெய்வ வழிபட்டாளர்களாய் இருக்கின்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்த்தல் பற்றி நல்ல நியாயமான முடிவுகளை மேற்கொள்

வதை நான் அறிந்திருக்கின்றேன். அவர்கள் தங்கள் பிள்ளைகளுடன் நேரம் செலவிடுவதைத் தேர்ந்துகொண்டனர், அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதைத் தேர்ந்துகொண்டனர், அவர்களின் எதிர்காலத்திற்கென்று நல்லவற்றை அளிப்பதைத் தேர்ந்து கொண்டனர்; இருப்பினும் அவர்கள் தங்கள் வாழ்வில் தேவனின்றி வாழ்ந்துகொண்டிருந்தனர்.

ஒரு ஆண்டில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியானது ஒரு குடும்பம், நன்றிசெலுத்தும் நாளன்று ஒன்றுகூடி உணவு உண்பதைச் சித்தரித்தது. அவர்களின் மேல்வர்க்கத் தரமான வீடு, அன்பு, வசதி, ஏற்றுக்கொள்ளும் தன்மை, சமாதானம், ஒன்றுகூடியிருத்தல் ஆகியவற்றை வெளிக்காண் பித்தது. எவரொருவரும் இல்லத்தில் கொண்டிருக்க விரும்பும் எல்லாமும் இருப்பதாகக் காணப்பட்டது. அவர்கள் தங்கள் உணவை உண்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில், அவர்களின் தந்தையானவர், அவர்கள் ஒவ்வொருவரும் நன்றிகூறச் சிலவிஷயங்களைக் குறிப்பிடும்படி கேட்டுக்கொண்டார். அவர்கள் தங்கள் நன்றியுணர்வை வெளிப்படுத்தி யவர்களாய் மேஜையைச் சுற்றிச் சென்றனர். இருப்பினும் ஒரு கருத்து, அங்கே தவறியிருந்தது: தேவன் குறிப்பிடப்படவில்லை. இந்தக் குடும்பம் தேவனுக்கு நன்றிசெலுத்தவில்லை. அது உங்கள் இருதயத்தை நொறுங்கச் செய்ய வேண்டும். இந்தச் சித்தரிப்பு மிகவும் அடிக்கடி காணப்படுகிறது. ஒவ்வொரு விஷயமும் - வீடு, குடும்பம், உணவு, கேளிக்கை, மற்றும் இதமான சூழ்நிலை ஆகியவை - தத்தமது இடத்தில் இருந்தன ஆனால் இது தேவனற்ற வாழ்வாக உள்ளது!

உம்ரி ஒரு புத்திக்கூர்மையுள்ள மனிதராயிருந்தார் என்பது உறுதி. அவர் நாட்டிற்கான முன்கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார். அவர் சில நல்ல முடிவுகளை மேற்கொண்டார். இருந்தபோதிலும், அவர் ஒரு பயங்கரமான இருட்டிடத்தைக் கொண்டிருந்தார்: அவர் முற்றிலுமாகத் தேவனின்றி வாழ்ந்து கொண்டிருந்தார். தேவனுடைய நித்தியமான புயங்கள் அல்ல, ஆனால் மாம்சத்தின் கைகளே அவரை [உம்ரியை] தாங்கிக் கொண்டிருந்தன.

## நிரந்தரமான கெட்டபெயர்

கெட்டபெயர் என்பது உம்ரி தேவனின்றிச் செய்த இன்னுமொரு சாதனையாக இருந்தது. அவர் ஒருசில மக்களே சாதிக்கக்கூடிய புகழ்ச்சி யொன்றைக் கொண்டிருந்தார். உம்ரியின் பெயரானது இஸ்ரவேலில் மாத்திரமல்ல, ஆனால் இஸ்ரவேலுக்குப் புறம்பாகவும் வரவிருந்த பல ஆண்டுகளில் மதிக்கப்பட்டிருந்தது.

அவர் அசீரியக் கல்வெட்டுக்களில் முதன் முறையாகக் குறிப்பிடப் பட்ட யூத அரசராக, மேவாபியக் கல்வெட்டில் தமது பெயரைக் கொண்டு இருமுறை குறிப்பிடப்பட்டவராக இருக்கின்றார். 1868ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19ம் தேதி, ஒரு ஜெர்மானிய ஊழியக்காரர், டைபான் என்ற பழங்கால மோவாபிய நகரத்தின் சிதிலங்களுக்கு அருகில் முகாமிட் டிருந்தார். அங்கு வந்த ஒரு சேக், அவரது கூடாரத்தில் இருந்து பத்து நிமிட நடைத் தூரத்தில் ஒரு கல்வெட்டு இருப்பதாகக் கூறினார். அவர்

அந்த இடத்திற்குச் சென்று சேர்ந்தபோது, குப்புறக்கிடந்ததான, மூன்று அடிகளும் பத்து அங்குலமுமான உயரமும், இரண்டு அடிகள் அகலமும், பத்தரை அங்குலங்கள் தடிமனும் கொண்ட ஒரு கறுப்புக் கல்வெட்டுத் துண்டைக் கண்டார், அது மேல்பகுதியில் ஏறக்குறைய அரைவட்ட வடிவத்தில் இருந்தது. அதில் இருந்த கல்வெட்டு எழுத்துக்கள் முப்பத்து நான்கு வரிகள் நீளமானது என்று பிற்பாடு கண்டறியப்பட்டது.[2]

அந்தக் கல்லில் இருந்து ஏற்படுத்தப்பட்ட பிழிவுகளில், அதிகமான உழைப்பு மற்றும் ரகசியத்தைக் கண்டுபிடித்தல் ஆகியவற்றைக் மேற் கொண்டதன்மூலமாக, மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டன. ஐந்தாம் மற்றும் ஏழாம் வரிகளில், உம்ரி பெயரைக் கொண்டு குறிப்பிடப் பட்டிருந்தார். மோவாபிய அரசரான, மேசா என்பவரால் கல்லில் எழுதச்செய்யப்பட்ட வரிகள், உம்ரியைப் பற்றிப் பின்வருமாறு கூறு கின்றன:

> இஸ்ரவேலின் அரசரான உம்ரி, மோவாபிய நாட்டைப் பல நாட் களாகத் துன்புறுத்தினார், ...
>
> ... இப்போது உம்ரி, மோவாபிய நாடு முழுவதையும் உரிமை யாக்கிக் கொண்டு, தமது நாட்களின்போதும், தமது மகன்களின் [அல்லது தமது மகனின்] காலத்தின் பாதிநாட்களின் போதும், நாற்பது ஆண்டுகளாக அதில் தங்கியிருந்தார்; ...[3]

இந்தக் கல்வெட்டை எழுதச் செய்தவரான, மோவாபிய அரசர் மேசா, 2 இராஜாக்கள் 3:4ல் குறிப்பிடப்பட்டிருக்கின்றார்:

> மோவாபின் ராஜாவாகிய மேசா ஆடுமாடுகள் பெருத்தவனா யிருந்து, இஸ்ரவேலின் ராஜாவுக்கு இலட்சம் ஆட்டுக்குட்டிகளையும், இலட்சம் குறும்பாட்டுக்கடாக்களையும் செலுத்திவந்தான்.

அந்தக் கல்வெட்டில், மேசா பெருமைப்படுத்தப்பட்டிருந்தார். அவரது தந்தை உம்ரியால் தோற்கடிக்கப்பட்டிருந்தார், ஆனால் மேசா, தமது தந்தை இழந்திருந்த நாட்டின் பகுதியை மீட்டுக்கொள்ளக்கூடியவராயிருந்தார். மேசா தனது எல்லைப் பகுதியைத் திரும்ப எடுத்துக்கொள்ளக்கூடியவராய் இருந்தார் என்ற உண்மைக்காக மகிமைப்படுத்தப்பட்டார். அந்தக் கல்வெட்டானது மேசாவின் ஆட்சிக்காலத்தினுடைய பிற்பகுதியில், ஆகாபின் மரணத்திற்குப் பின்பு செதுக்கப்பட்டிருந்தது. அந்தக் கல்வெட்டு, உம்ரி தமது ஆட்சிக்காலத்தின்போது எவ்வளவு பலம் வாய்ந்தவராக இருந்தார் என்பதைக் காண்பிக்கின்றது. அது உம்ரி தமது நாட்டில் போதுமான அளவுக்கு இராணுவத்தை எழுப்பக்கூடியவராக இருந்தார் என்பதற்கும், அது மோவாபியருடைய நாட்டைத் தோல்வியடையச் செய்யும் நிலையில், மிகச்சமீபத்தில் ஒரு எதிர்த்தாக்குதலினால் பெலவீனப்படுத்தப்பட்டது என்பதற்கும் சாட்சியளிக்கிறது. இது, அவர் - பராமரித்தலில் மாத்திரமல்ல, ஆனால் தாம் கொண்டிருந்த நாட்டின் எல்லையை விரிவாக்குதலிலும் - பலசாலியாய் இருந்தார் என்று

*அர்த்தப்படுகிறது. மேசாவின் பெருமைப்பாராட்டுதல், அவர் பின்வருமாறு கூற விரும்பியதைத் தெளிவாக்குகிறது, "யார் மாபெரும் மனிதர் என்று நீங்கள் அறிவீர்களா? அவன் எடுத்துக்கொண்டிருந்த [நமது] நாட்டின் பகுதியை நான் திரும்ப மீட்டிருக்கின்றேன். அது உண்மையில் நானே பெரியவன், மிகப்பெரியவருக்கும் பெரியவன் என்று அர்த்தப்படுகிறது!"*

*ஆம், உம்ரி என்பவர், இஸ்ரவேல் மத்தியிலும் மற்ற நாடுகளின் மத்தியிலும் ஒரு கெட்ட பெயரைச் சம்பாதித்திருந்தார், ஆனால் அவர் அதைத் தேவனுடைய ஐக்கியத்திற்குப் புறம்பே செய்திருந்தார். அவருடைய ஆவிக்குரிய நிலை பற்றிக் கூறுவதில் வேதாகமம் வார்த்தைகளை வீணாக்கவில்லை. அவர் தமக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் துன்மார்க்கராய் இருந்தார் என்று வேதாகமம் கூறுகிறது.*

> *உம்ரி கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கேடாய் நடந்து, நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் சகல வழியிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குத் தங்கள் வீணாண விக்கிரகங்களாலே கோபம் மூட்டும்படியாய் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவங்களிலும் நடந்தான் (16:25, 26).*

*அவர் தமது மகன் ஆகாபிற்கு யேசபேலைத் திருமணம் செய்விக்க ஏற்பாடு செய்தார், இது அவர் தமது நாடு மற்றும் தீரு நாடு ஆகியவற்றிற்கு இடையில் உள்ள ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கையாக இருக்கலாம், இந்த ஜோடியானது வரவிருந்த பல ஆண்டுகளுக்கு இஸ்ரவேலைத் துன்புறுத்தக் கூடியதாயிருந்தது. ஆகாபைப் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது:*

> *நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம்பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு (16:31).*

*உம்ரி தேவனின்றி நடந்தார், அவரது நடக்கையின் செல்வாக்கிற்கு அவரது மகனும் உட்படலானார்.*

## *முடிவுரை*

*உம்ரி இஸ்ரவேலின் மாபெரும் அரசர்களில் ஒருவராயிருந்தார். அவர் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அவசியமானவற்றை, செயல்விளைவுடன் நிலைநிற்கும் இராணுவத்தை, மற்றும் அகில உலக விளம்பரத்தை அளித்தார். அவர் பலம், கண்ணோக்கு, மற்றும் கவனிக்கப்படத்தக்க தன்மை ஆகியவற்றைக் கொண்டிருந்தார். இருப்பினும், அவரது வெற்றிகள், மாம்சப் பிரகாரமானவைகளாக, உலகரீதியானவைகளாக, மனிதரால் வந்தவைகளாக இருந்தன.*

*அவர் தோற்றுவித்த அரசவம்சமானது, துன்மார்க்கத்தில் தனக்கு முன்னிருந்த எல்லா அரசவம்சங்களைக் காட்டிலும் விஞ்சியதாய் இருந்தது, அது "உம்ரியின் கட்டளைகள்" என்பதை, யெகோவா தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிர்த்து நின்ற வாழ்வின் ஓட்டத்திற்கு ஒரு வழக்குச் சொல்லாக்கிற்று. பிற்பாடு, மீகாவின் நாட்களில், யாரேனும் ஒருவரை அவரது நடக்கையினிமித்தம் கண்டித்து உரைப்பதற்கு "நீ உம்ரியின் கட்டளைப்படி வாழ்கின்றாய்" என்று ஒருவர் கூறுவார். மீகா 6:16, "... உம்ரியினுடைய கட்டளைகளும் ஆகாப் வீட்டாருடைய எல்லாச் செய்கைகளும் கைக்கொள்ளப்பட்டு வருகிறது; ..." என்று கூறுகிறது.*

*உம்ரி யூதாவின் அரசரான ஆசாவின் முப்பத்து மூன்றாம் ஆண்டில், தமது அரியணையைத் தமது மகனுக்கு விட்டுச் சென்றார். அவரைப் பற்றி வேறு அதிகமாக எதுவும் கூற இயலாது. யாரேனும் ஒருவர் இறக்கும்போது, நாம் அவர் தேவனுடன் இருக்கும்படி சென்றார் என்றோ அல்லது அதைப்போன்ற வேறு ஏதாவதோ கூறுவது வழக்கம், ஆனால் உம்ரியைப் பொறுத்தவரை இதைப்போன்று எதுவும் கூற இயலாது. தேவனின்றி வாழ்ந்த ஒருவரைப் பற்றி என்ன கூற முடியும்? மூன்று விஷயங்கள் மாத்திரமே கூறப்பட முடியும்: அவர் மரித்தார்; அவர் அடக்கம்பண்ணப் பட்டார்; மற்றும் அவரது இடத்தில் அவர் மகன் அரசரானார்.*

> *உம்ரி தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, சமாரியாவிலே அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஆகாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான் (16:28).*

*உம்ரியின் வாழ்வும் மரணமும் தேவனின்றி வாழ்வில் சாதிக்கப்படும் எந்த வெற்றியும் வெறுமையானதாக, ஒன்றுமற்றதாக, மற்றும், இறுதியில், நம்பிக்கையற்றதாக உள்ளது என்ற சத்தியத்திற்கு அமைதியான சாட்சியாக நிற்கின்றன. நம் ஒவ்வொருவருக்கும் தேவன் கொடுத்துள்ள சுயாதீனத்தினிமித்தம், நாம் அவரின்றி வாழவும், நாம் விரும்புகின்ற எதையும் சிந்திக்கவும், செய்யவும், தேர்ந்துகொள்ளலாம். இருப்பினும், நாம் தேவனின்றி வாழ்வதைத் தேர்ந்துகொண்டால், தேவன் மாத்திரமே நிரப்பியிருக்கக்கூடிய வெறுமையை நாம் அனுபவிப்போம். தேவனுடைய பிள்ளைகள் மாத்திரமே பெற்றுக்கொள்ளக்கூடியதான தேவனுடைய அருளிரக்கத்தின் மூடுதலை நாம் பெறத் தவறிவிடுவோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் வாழ்வில் எவ்வளவுதான் வெற்றியடைந்திருப்பினும், நாம் கணக்கு ஒப்புவிக்கும் நாளில் கடைசி நியாயாதிபதியின் முன் வரும்போது, நமது வாழ்வானது "தோல்வியானது!" என்று அடையாளப்படுத்தப்படும். இந்த உலகத்தில் நாம் தேவனின்றி வெற்றியின் அளவை அறியமுடியும், ஆனால் அவருடைய ஐக்கியமின்றி நாம் அவர் விரும்பியவண்ணம் வாழ இயலாது. இந்த வாழ்வில் நாம் அவரின்றி நடந்தால், நித்தியத்தில் அவரின்றி நாம் நீண்டதூரம் நடக்க வேண்டியிருக்கும்.*

**கற்க வேண்டிய பாடம்:**
**ஒருவர் தேவனின்றி வெற்றியின் அளவொன்றைக் கொண்டிருக்க முடியும். ஆனால் அது வெறுமையானதும் கனியற்றதுமாய் இருக்கிறது.**

---

*குறிப்புகள்*

*[1]உம்ரி யூதாவின் அரசரான ஆசாவின் முப்பத்தியோராம் ஆண்டில், தமது ஆட்சியைத் தொடங்கி பன்னிரெண்டு ஆண்டுகளாக ஆட்சிசெய்தார் என்று கூறப்படுவதுண்டு (1 இராஜாக்கள் 16:23), ஆனால் சிம்ரி, ஆசாவின் ஏழாம் ஆண்டில் தொடங்கி, திர்சாவில் ஏழு நாட்கள் ஆட்சிசெய்தார் மற்றும் அவர் உம்ரியால் கொல்லப்பட்டார், உம்ரி அரியணையை எடுத்துக்கொண்டார் என்றும் கூறப்படுகிறது (1 இராஜாக்கள் 16:15). பிற்பாடு, ஆகாப், ஆசாவின் முப்பத்தியெட்டாம் ஆண்டில் ஆட்சிசெய்யத் தொடங்கினார் என்று கூறப்படுகிறது (1 இராஜாக்கள் 16:29). ஆசாவின் முப்பத்தியோராம் ஆண்டில் உம்ரி ஆட்சிசெய்யத் தொடங்கினார் (1 இராஜாக்கள் 16:23) என்ற குறிப்பானது, திப்னியின் மரணத்திற்குப்பின்பு அவரது முழுமையான ஆளுகைக்கான குறிப்பாயிருக்க வேண்டும்.*
[2]John D. Davis, “Moabite Stone,” *Davis Dictionary of the Bible*, rev. ed. (n.p.: Trustees of the Presbyterian Board of Publication and Sabbath School Work, 1898; reprint, Nashville, Tenn.: The Varsity Company, 1973), 530. [3]Ibid.